Previous Date of examination :

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவாரூர்**

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 21 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ.சா. 62 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சசி | வயது | 36/2022 |
| கணவர் பெயர் | பாலமுருகன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | பவித்ரமாணிக்கம் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பவித்ரமாணிக்கத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். நான் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் குடியிருந்து வந்தேன். சக்திவேலுக்கு நான் குடியிருந்த வீட்டிற்கு அருகிலேயே ஐந்து வீடுகள் உள்ளது. மொத்தம் ஆறு வீடுகளும் காலனியாக இருக்கும். நான் 4 வது வீட்டில் இருந்தேன். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி 3 வது வீட்டில் குடியிருந்து வந்தார். நான் சக்திவேல் வீட்டில் பால் வழக்கமாக வாங்குவேன். அவ்வாறு நான் பால் வாங்கும்போது கோர்ட்டில் ஓ.ஏ. வேலை இருப்பதாக சொன்னார். அதற்கு ரூ.2 லட்சம் செலவாகும் என்றும், அதில் முன்பணமாக ரூ.1 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். நான் 10 வது படித்துவிட்டு வீட்டில் இருந்ததால் வேலைக்கு போகலாம் என நினைத்து ரூ.1 லட்சத்தை 2018 ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் கொடுத்தேன். தேதி ஞாபகம் இல்லை. 1 வது எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது 1 வது எதிரியின் தாயார் மற்றும் அவருடைய மனைவியும் இருந்தார்கள். மூன்று மாதத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்ன நிலையில் மூன்றுமாதம் ஆகியும் வேலை வராததால் நான் பால் வாங்க போகும்போது என்ன ஆயிற்று என கேட்டுக்கொண்டு இருந்தேன். அப்போது 1 வது எதிரி என்னிடம் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்துள்ளதாகவும், அவரிடமே கேட்கலாம் என்று சொல்லி என்னையும் அழைத்து

சென்று கோவிந்தலெட்சுமி குடியிருக்கும் வீட்டிற்கு அழைத்து போனார். 2 வது எதிரியிடம் கேட்டபோது 2 வது எதிரி வேலை செய்யும் ஜட்ஜிடம் பணம் கொடுத்துள்ளதாகவும், அவர் சென்னை சென்றுள்ளதாகவும், வந்தவுடன் ஒரு மாதத்தில் வேலை வந்துவிடும் என்றும் இல்லாவிட்டால் பணத்தை வாங்கி கொடுத்துவிடுவதாகவும் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி என்னிடம் சொன்னார். அதன்பிறகு 1 வது எதிரி சக்திவேல் வீட்டில் சுமார் 10 பேர் வந்து பிரச்சனை செய்துக்கொண்டு இருந்தார்கள். நான் சத்தம் கேட்டு போய் பார்த்தபோது என்னைபோல் அவர்களும் வேலைக்கு பணம் கொடுத்தவர்கள் என்று தெரிந்துக்கொண்டேன். அவர்கள் கோர்ட்டிற்கு போவதாக சொன்னார்கள். அவர்களுடன் நானும் பணம் கொடுத்துள்ளேன் என்று சொல்லி நானும் கோர்ட்டிற்கு வந்தேன். அது திருவாரூர் கோர்ட்டாகும். ( சாட்சி இந்த கோர்ட்டிற்கு மேலே உள்ள மாடி கோர்ட்டிற்கு போனதாக சொல்கிறார்) எங்களை பார்த்தவுடன் 2 வது எதிரி மண்ணெண்ணெய்யை அவர் மீது ஊற்றிக்கொண்டு ஒரு ரூமிலிருந்து வெளியே ஓடி வந்தார். அபோது என்னுடன் வந்தவர்களும், கோர்ட்டில் வேலை செய்பவர்களும் இருந்தார்கள். அவர் செய்ததை பார்த்தவுடன் நான் பயந்துக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு தினமும் பல நபர்கள் 1 வது எதிரியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்து வந்தார்கள். நான் குழந்தைகளை வைத்துக்கொண்டு அங்கு இருப்பதற்கு சரிபடாது என்று வீட்டை காலி செய்து வேறு வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு போலிசார் ஒரு போன் செய்து என்னை டி.எஸ்.பி. ஆபீஸிற்கு வருமாறு சொன்னார்கள். நான் வந்து நடந்த விபரங்களை போலிசாரிடம் சொன்னேன். சுரேஷ் எ ன்பவர் புகார் கொடுத்திருப்பதாக தெரிந்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. ( 1 வது எதிரி தரப்பில்)**

நான் போலிசார் விசாரணை செய்தபோது தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை சொன்னேன் என்றால் சரிதான். நான் சுமார் 3 1/2 வருடங்கள் குடியிருந்தேன். நான் குடியிருந்த சமயத்தில் 2 வது எதிரியும் அங்கு குடியிருந்தார். நான் ஒருமுறைதான் 2 வது எதிரியிடம் கேட்டேன். அதன்பிறகு அவரிடம் நேரடியாக கேட்கவில்லை. 2 வது எதிரி திருவாரூர் நீதிமன்றத்தில் வேலை செய்த விபரம் எனக்கு தெரியும். 2 வது எதிரி நீதிமன்றத்தில்வேலை செய்வதால் எனக்கு வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு சுமார் 10 பேர் வந்தோம். என்னுடன் வந்த மற்ற நபர்கள்

வெளியூர்காரர்கள். அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியவில்லை. எங்களுடன் சக்திவேல் அப்போது நீதிமன்றத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நாங்கள் நீதிமன்றத்திற்கு வந்தது, காலை சுமார் 11.00 மணியிலிருந்து 1.00 மணி இருக்கும். அன்று நீதிமன்றம் விடுமுறை கிடையாது என்றால் சரிதான். எங்களை யாரும் கோர்ட்டிற்குள் வருவதற்கு தடுத்தார்களா என்றால் இல்லை. நான் பார்த்தபோது 2 வது எதிரி ஒரு ரூமிலிருந்து மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு ஓடி வந்தார். பதற்றத்துடன் இருந்தார் என்றால் சரிதான். எனக்கு பயமாக இருந்தது. நான் பணம் கொடுத்தது தவறு என்பதால் பயந்துக்கொண்டு மேற்கொண்டு என்ன நடந்தது என்று நான் வீட்டிற்கு போனபிறகு கேட்கவில்லை. புகார் கொடுத்த சுரேஷ் என்ற நபரை நான் பார்த்துள்ளேன். எனக்கு அறிமுகம் கிடையாது. நீதிமன்றத்திற்கு 10 நபர்களுடன் வந்ததாக நான் சொல்லும் தேதியில் சுரேஷ் என்பவரும் வந்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1 வது எதிரி சக்திவேல் 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்து ஏமாந்துவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரிந்துக்கொண்டேன். 1 வது எதிரி யார், யாரிடம் பணம் பெற்று 2 வது எதிரியிடம் கொடுத்துள்ளார் என்ற விபரத்தையும் அவர்களது தொலைபேசி நம்பரையும் குறிப்பீட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதனடிப்படையில்தான் போலிசார் நான் குடியிருந்த வீட்டிற்கு வந்து பார்த்துவிட்டு எனக்கு போன்மூலம் தகவல் சொல்லி விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் எந்த தேதியில் எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. டி.எஸ்.பி.ஆபீஸில் வைத்து விசாரித்தார்கள். நான் சக்திவேலிடம் கொடுத்துள்ள பணத்தை தொடர்ந்து கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1 வது எதிரி பணத்தை திருப்பி தருகிறேன் என ஆசை வார்த்தை கூறியதால், 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி நீதிமன்ற முதல் விசாரணையிலும், 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையிலும் முதன்முறையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி என்னிடம் தந்துவிடுவதாக ஆசை வார்த்தை கூறியதால், 1 வது எதிரியின் வீட்டில் 2 வது எதிரி குடியிருந்ததாகவும், 2 வது எதிரியை எனக்கு தெரியும் என்றும், 1 வது எதிரி 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்துள்ளதாகவும், 2 வது எதிரி குடியிருந்த வீட்டிற்கு தன்னை அழைத்து சென்றதாகவும், 2 வது எதிரியிடம் நான் கேட்டதாகவும், 2 வது எதிரி அவர் வேலை செய்யும் ஜட்ஜியிடம் கொடுத்துள்ளதாக சொன்னதாகவும், ஒரு மாதத்தில் வேலை வந்துவிடும் என்றும், இல்லாவிட்டால் பணத்தை திருப்பி தந்துவிடுவதாகவும் 2 எதிரி சொன்னார் என்றும், 1 வது

எதிரியின் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டு நான் பார்த்தபோது 10 நபர்கள் பிரச்சனை செய்ததாகவும், அவர்களும் பணம் கொடுத்துள்ள நபர்கள் என்று தெரிந்துக்கொண்டதாகவும், அவர்களுடன் சேரந்து திருவாரூர் நீதிமன்றத்திற்கு வந்ததாகவும் அப்போது 2 வது எதிரி மண்ணெண்ணெய்யை உடம்பில் ஊற்றிக்கொண்டு ரூமிலிருந்து ஓடி வந்ததை நான் பார்த்ததாகவும், அப்போது நீதிமன்ற பணியாளர்கள் அங்கு இருந்ததாகவும், 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் பணி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பணம் கொடுத்ததாகவும், 1 வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்து ஏமாந்த விபரமும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரமும் தெரியும் என்றும் பணம் கொடுத்தவர்கள் விபரம், செல்போன் நம்பர் ஆகியவற்றை குறிப்பிட்டு புகார் கொடுத்த விபரம் தெரியும் என்றும் 1 வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றும், 2 வது எதிரி மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு நின்றதை நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடன் வந்த நபர்கள் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது. மன்னார்குடியிலிருந்து வந்ததாக சொன்னார்கள். நான் அவ்வாறு யாருடனும் சேர்ந்து வரவில்லை என்றால் சரியல்ல.